**ஆனமடுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆனமடுவ பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன.

(அ) வீத வரி, வாடகை, ஏக்கர் வரி, ஓய்வூதியம் மற்றும் பரிவர்த்தனைக் கம்பங்களின் போன்ற வருமானங்கள் நிலுவை அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 12,949 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் பெறுமதி உள்ளடங்கலாக 05 சொத்துக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 90,407 தொகையான குழாய்க் கிணற்று உபகரணங்களின் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது தனியார் நிறுவகம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 217,081 தொகையான முற்பணத் தொகை முற்பணமாகக் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அத் தொகை மீளாய்வாண்டின் போது தீர்க்கப்படுகையில் திரண்ட நிதிக்குச் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக உரிய செலவின விடயங்களுக்குச் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது செலவினங்கள் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஆண்டிற்கான வருமானம் பட்டியலிடப்படுவது முறைப்படி கணக்குகளுக்கு சீராக்கப்பட்டிராமையால் 04 வருமான விடயங்களுக்குரிய வருமானம் ரூபா

960,763 குறைவாகவும் ஒரு வருமான விடயத்திற்குரித்தாக ஆண்டின் வருமானம் ரூபா 28,229 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையான ரூபா 81,624 இற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் அப் பெறுமதியிலிருந்து ஆண்டிற்கான செலவினமும் செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியக் கணக்கும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2013 ஆம் ஆண்டின் ஐஏ ஆம் காலாண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய முத்திரை வரித் தொகையான ரூபா 30,520 தொகை முறைப்படி கணக்கிடப்பட்டிராமையால் ஆண்டிற்கான வருமானம் அத் தொகையால் அதிகமாகவும் செலுத்த வேண்டிய முத்திரை வரிக் கணக்கு அதே தொகையால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஏ) ஆண்டிற்கான மூலதன மானியம் ரூபா 898,445 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2013 ஆம் ஆண்டின் III ஆம் காலாண்டிற்குரித்தாக பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 127,612 தொகை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்கிற்கு கணக்கிடப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கு அதிகரித்தும் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்கு குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) பெறுமதி சேர் வரிப் பெறுவனவான ரூபா 39,140 தொகை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப் பெறுவனவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கு அதே பெறுமதியால் குறைவாகவும் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்கு அதே பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய வைப்புகளான ரூபா 1,070,951 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதி குறைவாகவும் திரண்ட நிதியம் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஔ) கடன்கொடுத்தோர் அதிகரித்துக் கணக்கிடப்பட்டிருந்தமையால் நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் ஆண்டிற்கான செலவினம் ரூபா 64,800 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) நிலுவை ஏக்கர் வரித் தொகையான ரூபா 25,095 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் ஆண்டிற்கான செலவினம் மற்றும் நிலுவையாகக் காணப்பட்ட ஏக்கர் வரிக் கணக்கு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(கா) 2013 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் உரிய பரிவர்த்தனைத் தூண்களுக்கான ரூபா 92,302 தொகையான வருமானத்திற்காக கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் ஆண்டிற்கான வருமானமும் வருமானக் கடன்பட்டோரும் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(கி) 2013 சனவரி முதல் மே மாதம் வரை சேர்க்கப்பட்ட பெறுமதியான ரூபா 20,293 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்கின் இறுதி மீதி திரண்ட நிதியத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தமையால் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப் பெறுமதி ரூபா 20,293 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதி அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

03 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 34,595,074 தொகையான போதிலும் பொதுப் பேரேட்டின் படி உரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,899,739 தொகையானமையால் ரூபா 2,695,335 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று கண்டறியப்பட்டது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 80,147,722 தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,288,151 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,818,402 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீதவரியும் வரியும் | 1,919 | 1,048 | 871 |
| வாடகை, கடை வாடகை | 6,701 | 6,606 | 95 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 950 | 964 | (14) |

**2.2.2 வீத வரி**

நிலுவையான வீத வரி அறவீட்டைப் போன்று பற்றுச்சீட்டிடப்பட்ட வருமான அறவீடும் ஆண்டின் போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் இல்லாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் போது நிலுவைத் தொகைக்கு ஆண்டின் நிலுவை சேர்க்கப்பட்டமையால் ரூபா 3,082,479 தொகையான வீதவரி நிலுவை வருமானம் காணக்கூடியதாக இருந்தது.

**2.2.3 ஆதன வரி**

புதிய பஸ் தரிப்பிடத்தின் 5 கடைகளுக்காக பட்டியலிடப்பட்ட தொகையான ரூபா 100,600 தொகையில் எவ்வித தொகையும் 2014 ஆம் ஆண்டின் மே மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆம் 36திகதியில் உள்ளவாறு ரூபா 4,361,160 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

**2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டவாறு சபையிடம் காணப்பட்ட ரூபா 597,668 பெறுமதியான நான்கு சக்கர உழவு இயந்திரம் ஒன்றும் பெறுமதி கணிப்பிடப்பட முடியாத மேலும் ஓர் உழவு இயந்திரமும் 03 உபகரணங்களும் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 செப்தெம்பர் 30 ஆம் தினத்தில் அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் பெறுமதி ரூபா 5,309,180 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 20 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 39,867 தொகையான கடன் முற்பணம் பல ஆண்டு காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆனமடுவ, பள்ளம மற்றும் மஹாகும்புக்கடவல பொது நூலகங்களிலிருந்து புத்தகங்கள் காணாமற் போனமையால் சபைக்கு ரூபா 32,567 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அந் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 3,670,000 பெறுமதியான 08 பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு சபை தவறியிருந்ததுடன் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்